**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, MAYILADUTHURAI**
**CC. CASE NO. 212/2019**

Deposition of LW8 Examined as PW8 Date 06.07.2026

| | |
|---|---|
| Name | ராமசந்திரன் (Rtd. Sub-Inspector of Police. ) |
| Father's Name | கோவிந்தசாமி |
| Village | திருவாடுதுறை |
| Taluk | குத்தாலம் |
| Age | 65/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 06.07.2026

(A1, A2 called absent. U/s. 355 of BNSS petition filed and allowed.)

**முதல் விசாரணை**

நான் காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். கடந்த 18.07.2019 அன்று நான் பாலையூர் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலைய அலுவலில் இருந்த போது பிரபாகரன் த/பெ. இளங்கோ என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று பாலையூர் காவல்நிலையம் குற்ற எண். 95/2019 இதச பிரிவு 379 ன் கீழ் பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தேன். **இந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சம்பவ இடம் சென்று பட்டியல் சாட்சிகள் 1 முதல் 3 வரையிலானவர்களையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவ சாட்சிகள் பாஸ்டின், மகாதேவன் ஆகியோார் முன்னிலையில் சம்பவஇடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடத்தினை தயார் செய்தேன். **அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ.7, அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பட்டியல் சாட்சிகளான பிரபாகரன்,ஆதித்யன், பிரவீன்குமார், பாஸ்டின், மகாதேவன் ஆகியோர்களை விசாரணை செய்ததில் சம்பவம் உண்மை என தெரிய வந்து அ.சா.1 நிலையத்தில்ஆஜர் செய்த எதிரிகளை குற்றக்காரணம் கூறி கைது செய்து 2-வது எதிரி தானாக முன்வந்து சாட்சிகள் வாய்மைராஜ், முருகன் ஆகியோர் முன்னிலையில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அ.சா.1 நிலையத்தில் ஆஜர் செய்த இவ்வழக்கின் சான்று பொருட்களான 10மீ வெள்ளை கலர் காப்பர் வயர் பேட்டரிகள் எண்ணிக்கை 2 ஆகியவற்றை படிவம் 91-ன் மூலமாக நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேன். **படிவம் 91 அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பேட்டரிகள் மற்றும் வயர்தான் நான் தாக்கல் செய்தவை ஆகும். பின்னர் எதிரிகள் மீதான விசாரணையை முடித்து கடந்த 17.10.2019 அன்று இதச பிரிவு 379 ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

காவல் நிலையத்திற்கு வந்து புகார் அளிக்கப்பட்ட பின்னர் எத்தனை மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் 18.07.2019 அன்று 15.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. புகார் பெறுவதற்கு முன்பாகவே போலீசார் சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்திற்கு சென்றதாகவும், எதிரிகளை பிடித்து தடயப் பொருட்களுடன் ஆட்டோவில் அனுப்பியதாகவும் சாட்சிகள் சாட்சியம் அளித்துள்ளனர் என்றால் 18.07.2019 அன்று 15.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு 15.45 மணிக்கு தான் சம்பவ இடம் சென்றேன். அ.சா.1 புகாரை காவல் நிலையம் வந்து எழுதினாரா அல்லது எழுதி எடுத்து வந்தாரா என்றால் புகாரை எழுதியே எடுத்து வந்தார். அ.சா.1 தனது சாட்சியத்தில் புகாரை காவல் நிலையத்தில் வைத்து போலீசார் சொல்ல எழுதியதாக சாட்சியமளித்துள்ளார் என்றால் அவ்வாறு சொன்னால் தவறு. அ.சா.1 தனது சாட்சியத்தில் புகார் கொடுப்பதற்கு முன்பாகவே போலீசார் சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்திற்கு வந்ததாகவும், சாட்சிகளை விசாரணை செய்து எழுதி கொண்டதாகவும், புகைப்படம் எடுத்ததாகவும் சாட்சி அளித்துள்ளார் என்றால் அவ்வாறு சொல்லியிருப்பின் அது தவறு. அ.சா.2 தனது சாட்சியத்தில் மதியம் 2.30 மணியளவில் போலீசார் சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்திற்கு வந்ததாக சாட்சி அளித்துள்ளார் என்றால் அவ்வாறு சொல்லியிருப்பின் அது தவறு. இந்த வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவருமே அ.சா.1–ற்கு வேண்டப்பட்ட மற்றும் அவருடன் பணிபுரியும் அவரது நண்பர்கள் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் இருந்த நபர்களைதான் நான் சாட்சியாக விசாரித்தேன். சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்தில் இருக்கும் மற்ற பேட்டரிகள் ஒயர் கனெக்சனுடன் இருந்ததா என்றால் அது பற்றி நினைவில் இல்லை. எதிரிகளிடமிருந்து ஏதேனும் கைரேகை பதிவு மாதிரி எடுக்கப்பட்டு பரிசோதனைக்கு அனுப்பப்பட்டதா? என்றால் இல்லை. சம்பவத்தின் போது எதிரிகள் பிடிபட்டதாலும், ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளதாலும் கைரேகை பதிவு மாதிரி எடுக்கப்படவில்லை. எதிரிகள் பேட்டரிகளை திருடவில்லை என்றாலும் பேட்டரிகளை திட்டிதாக பொய் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும் சரி அல்ல. புகாரை நான் சொல்லிதான் அ.சா.1 எழுதினார் என்றால் சரியல்ல. 2–வது எதிரி தன்னிச்சையாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும், நான் தயார் செய்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரியை மிரட்டி கையொப்பம் பெற்றேன் என்றாலும் சரியல்ல. எலக்ட்ரீஷியன் உதவி இல்லாமல் சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்தில் உள்ள பேட்டரிகளை அகற்ற முடியாது என்றாலும், அவ்வாறு அகற்றியதாக எதிரிகளுக்கு எதிராக பொய்யாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் குற்ற

இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், வழக்காவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து வழக்கிற்கு ஏற்றார் போல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**Sd/--.எம்.ராஜேஷ்கண்ணா**
**நீதித்துறை நடுவர் எண். 2**
**மயிலாடுதுறை**